**மாதிரிவினாத்தாள் - 2025 - 26**

**SAMPLE QUESTION PAPER -2025 -26**

**வகுப்பு: பன்னிரண்டு** **மொத்த மதிப்பெண்கள்:80**

**(XII-STD)** **Maximum Marks: 80**

**தமிழ்** **காலஅளவு : 3 மணி**

**TAMIL : 106** **Time Allowed : 3 Hours**

---

- **இந்த வினாத்தாளில் அச்சிடப்பட்ட 11 பக்கங்கள் உள்ளதைச்**
- **சரி பார்க்கவும்**
- **இந்த வினாத்தாளில் 15 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்**
- **எழுதத் தொடங்குவதற்கு முன் வினாவரிசை எண்ணைக் குறிப்பிடவும்**
- **Please check that this question paper contains 11 printed pages**
- **Please check that this question paper contains 15 part of the questions**
- **Please write down the serial number of the question before attempting it.**

---

## பகுதி அ (படித்தல் -10 மதிப்பெண்)

## Section –A Unseen passage (10 Marks)

1. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு விடைதருக**. **5x1=5**

பாரதியின் கவிதாமண்டலத்தைச் சேர்ந்தவர்' என்று பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் பாரதிதாசன். இவர். சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் வளர்ச்சி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும். புவியை நடத்து; பொதுவில் நடத்து போன்ற பொதுவுடைமைக் கருத்துகளையும் மக்களாட்சித் தத்துவங்களையும் தமது பாடல்களில் வலியுறுத்தியவர். சந்த அமைப்புகளிலும் இசையிலும் பாரதியைப் போலவே நல்ல தேர்ச்சி பெற்றவர். மக்கள் இலக்கிய வடிவங்களான கும்மி, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு போன்ற வடிவங்களிலும் கவிதை பாடியவர். பழைய யாப்பு வடிவில் ஆசிரியப்பாவையும் ஆசிரிய விருத்தங்களையும் பாடினார். சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதை.

**ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்**

**உதையப்பராகிவிட்டால் ஓர்நொடிக்குள்**

**ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி**

**ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பாநீ**

என்ற பாடலின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

பாரதிதாசன் தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் எனப் பாடியதால் இரஷ்யக் கவிஞரான இரசூல் கம்சதோவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார். பாரதிதாசனைப் பின்பற்றி எழுதிய வாணிதாசன், முடியரசன், சுரதா போன்றோர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

**வினாக்கள்:**

I. பாரதிதாசன் பழைய யாப்பு வடிவில் எதைப் பாடினார்?

A) பாடல்கள் B) கவிதைகள் C) செய்யுட்கள்

D) ஆசிரியப்பாக்கள்

II. பாரதிதாசனைப் பின்பற்றி எழுதாதவர் யார்?

A) வாணிதாசன் B) கண்ணதாசன் C) முடியரசன் D) சுரதா

III. ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி - இவ்வடிகளில் ஓடப்பர் என்பவர் யார்?

A) பணக்காரர் B) நடுத்தர மக்கள் C) ஏழையோர்

D) மூன்றும் சரி

IV. இரசூல் கம்சதோவ் எந்நாட்டைச் சார்ந்தவர்?

A) ஜெர்மன் B) இந்தியா C) தமிழ்நாடு D) இரஷ்யா

V. மக்கள் இலக்கிய வடிவம் எது?

A) கதை B) கவிதை C) உரைநடை D) கும்மி

**2. பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.** **5x1=5**

தமிழக வரலாற்றில் தொன்மங்களின் கூறுகளாகப் பண்பாடு சார்ந்தும், பண்டைய தமிழர்களின் மரபு சார்ந்தும் தொன்றுதொட்டு பல விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படி நடக்கின்ற விழாக்களில் ஒன்றுதான் ஆடிப்பெருக்கு விழா. பாமர மொழியில் 'ஆடி பதினெட்டாம் பெருக்கு' என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். ஆடி பதினெட்டாம் நாள் நடக்கின்ற சிறப்பான விழா இது. தமிழர்கள் கொண்டாடுகிற விழாக்களில் தேதி பார்த்து நடக்கிற விழாக்களாக ஆடிப் பெருக்கையும், தை ஒன்றாம் நாள் நடக்கிற அறுவடைத் திருநாளாம்

பொங்கல் பண்டிகையையும் சொல்லலாம். மற்றவை நாள், நட்சத்திரம் பார்த்து நடக்கிற விழாக்களாகவே இருக்கின்றன. ஆடிப் பெருக்கு திருநாளை 'சப்த கன்னி'களுக்கு நடத்தப்படுகிற ஒரு விழாவாகவே வரலாறு காட்டுகிறது. முழுக்க முழுக்க பெண்கள் சார்ந்து நடத்தப்படுகிற விழா இது.

"ஆடிப் பிறையைத் தேடிப்பார்" என்றொரு பழமொழி புழக்கத்தில் உண்டு. பிறையின் வடகோடி உயர்ந்திருந்தால் அவ்வருடம் 'வெள்ளாமை' உயர்ந்திருக்கும் என்பதும் தென்கோடி உயர்ந்திருந்தால் 'வெள்ளாமை' தாழ்ந்திருக்கும் என்பதும் நம்பிக்கை. ஆடிப் பட்டத்தில் தேடி விதைத்த காலங்களெல்லாம் உண்டு. இன்றைக்கு அப்படியில்லை. நீரும் மண்ணும் பயிரும்தான் நம் மக்களை இயங்க வைக்கும், இயக்கவும் வைக்கும். வணிகர்களுக்கு ஆடித் தள்ளுபடி, நமக்கோ நல்ல காரியங்கள் செய்வதற்கு ஆடி தள்ளுபடி. ஆடியும் மார்கழியும் இறைவனுக்கும் இறைவிக்கும் உகந்த மாதங்கள் என்பதாலும் அவர்களைக் கொண்டாடி குதூகலிக்க வைக்க வேண்டும் என்பதாலுமே நல்லன செய்வதற்கு இடமளிக்கவில்லை என்று தோன்றுகிறது. நீரையும் பாலையும் இன்று ஒரேவிலை கொடுத்து வாங்க வேண்டிய சூழலுக்கு ஆட்பட்டிருக்கிறோம். இக் கொடுமைகள் அகலவும் நதித் தீரங்களில் வற்றாத மழை பொழிந்து நீர் பெருகவும் அதனால் பயிர்கள் செழித்து வளம் பெருகவும் இயற்கையை வணங்குவோம். நீரின்றி அமையாது உலகு.

**வினாக்கள்:**

I. ஆடிப்பெருக்கு யாருக்கு உரியது என வரலாறு கூறுகிறது.?
II. மக்களை இயக்குவது எது?
III. வேளாண்மை எப்போது உயர்ந்திருக்கும்?
IV. தமிழர்கள் தேதி பார்த்துக் கொண்டாடும் விழாக்கள் எவை?
V. நீரின்றி அமையாது உலகு - இது யாருடைய கூற்று?

## பகுதி -ஆ(இலக்கணம் -12 மதிப்பெண்)
## Section – B ( Grammar-12 Marks)

3. **<u>பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக</u> [ மூன்று மட்டும் ]** 3x1=3

I. **இன்னலிலே இருக்கும் தொழிளாலர்களை நாம் நினைக்க வேண்டும்.**

A) இன்னலிலே இருக்கும் தொழிளாலர்களை நாம் நினைக்க வேண்டும்.

B) இண்ணலிலே இருக்கும் தொழிளாலர்களை தாம் நினைக்க வேண்டும்.

C) இன்னலிலே இருக்கும் தொழிலாளர்களை நாம் நினைக்க வேண்டும்.

D) இன்னலிலே இருக்கும் தொலிழாளர்களை நாம் நிணைக்க வேண்டும்.

II. **என் மணம் பறந்து நின்ற மரக்கிலையிலிருந்து பரிக்கப்பட்ட மளர்போல் வாடுகிறது.**

A) எண் மணம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலர்போல் வாடுகிறது.

B) என் மணம் பறந்து நின்ற மரக்கிலையிலிருந்து பரிக்கப்பட்ட மலர்போல் வாடுகிறது.

C) என் மணம் பறன்து நின்ற மரக்கிளையிலிருந்து பரிக்கப்பட்ட மலப்போல் வாகுகிறது.

D) என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலர்போல் வாடுகிறது.

III. **கருத்தாளமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன்**

A) கறுத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள். படைத்தவர் ஜெயகாந்தன்.

B) கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள். படைத்தவர் ஜெயகாந்தன்.

C) கறுத்தாளமும் வாசெகச் சுவைப்பும் களந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன்.

D) கருத்தாளமும் வாசகச் சுவைப்பும் கழந்து இலக்கியங்கள். படைத்தவர் ஜெயகாந்தன்.

IV. **சட்டையில் படிந்துள்ள கறையைப் போக்கு.**

A) சட்டையிள் படிந்துள்ள கறையைப் போக்கு

B) சட்டையில் படிந்துள்ள கறையைப் போக்கு

C) சட்டையில் படிந்துள்ள கரையைப் போக்கு

D) சட்டையில் பரிந்துல்ல கரையைப் பேயக்கு

V. **வரண்டு கிடந்த புலுதிநிலம் வலம்பெற மழை பொழிய வேண்டும்.**

A) வரண்டு கிடந்த புளுதிநிலம் வலம்பெற மழை பொழிய வேண்டும்.

B) வறண்டு குடந்த புழுதிநிளம் வளம்பெற மலை பொழிய வேண்டும்.

C) வறண்டு கிடந்த புழுதிநிலம் வளம்பெற மழை பொழிய வேண்டும்.

D) வரண்டு கிடந்த புழுதிநிலம் வளம்பெர மலை பொழிய வேண்டும்.

**4. <u>வல்லினமெய்யிட்டுத் திருத்தியதொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக [ மூன்று மட்டும் ]</u>** **3x1=3**

I. **திறனாய்வு கலையை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் தி.சு. நடராசன்.**

A) திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் தி.சு. நடராசன்

B) திறனாய்வு கலையை தமிழுக்குப் அறிமுகப்படுத்தியவர் தி.சு. நடராசன்

C) திறனாய்வுக் கலையை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் தி.சு. நடராசன்

D) திறனாய்வு கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் தி.சு. நடராசன்

II. **பேருந்தை பிடிக்க சாலைகயை கடக்க இரு பக்கங்களையும் பார்.**

A) பேருந்தைப் பிடிக்க சாலையை கடக்க இருப்பக்கங்களையும் பார்

B) பேருந்தைப் பிடிக்க சாலையை கடக்க இருபக்கங்களையும் பார்.

C) பேருந்தைப் பிடிக்கச் சாலையைக் கடக்க இருபக்கங்களையும் பார்.

D) பேருந்தைப் பிடிக்க சாலையைக் கடக்க இருபக்கங்களையும் பார்.

III. **காவடிபாரம் சுமக்கிறவனுக்கு தெரியும்**

A) காவடிபாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்

B) காவடிப்பாரம் சுமக்கிறவனுக்கு தெரியும்

C) காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்

D) காவடிப்பாரம்ச் சுமக்கிறவனுக்கு தெரியும்

IV. **காக்கைக்கு தன் குஞ்சு பொன்குஞ்சு**

A) காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு

B) காக்கைக்குத் தன்க்குஞ்சு பொன்குஞ்சு

C) காக்கைக்குத் தன்குஞ்சு பொன்க்குஞ்சு

D) காக்கைக்கு தன்க்குஞ்சு பொன்க்குஞ்சு

V. **அறியா பிள்ளை செய்த பிழையால் தீரா துன்பம் அடைந்தான் .**

A) அறியாப்பிள்ளை செய்த பிழையால் தீராத்துன்பம் அடைந்தான்.

B) .அறியா பிள்ளை செய்தப்பிழையால் தீராத்துன்பம் அடைந்தான்.

C) அறியா பிள்ளை செய்த பிழையால் தீராத்துன்பம் அடைந்தான்.

D) அறியாப் பிள்ளை செய்த பிழையால் தீராதுன்பம் அடைந்தான்.

**5. எடுத்துக்காட்டு எழுதுக [மூன்று மட்டும்]** **3x1=3**

I. **உணர்ச்சி வாக்கியம் (வியப்பு)**

A) மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றனரே!

B) ஆசிரியர் அடிப்பாரோ!

C) சங்க இலக்கியங்கள் பல அழிந்துவிட்டனவே!

D) ஆ! தாஜ்மகாலின் அழகுதான் என்னே!

II. **நேர்க்கூற்று வாக்கியம்.**

A) “போருக்கு இன்று போய் நாளை வா” என்று இராமன் கூறினான்

B) போருக்கு அன்று போய் மறுநாள் வருமாறு இராமன் கூறினான்

C) மழை பெய்யாமையால் பயிர் விளையவில்லை.

D) மழை பெய்தமையால் பயிர் விளைந்தன.

III. **விழைவு வாக்கியம் (ஏவல்-விழைவு)**

A) பாடல்களை நன்றாகப் படி

B) உன் எழுதுகோலைத் தருக

C) பல்லாண்டு வாழ்க

D) தீயன ஒழிக

IV. **தொடர் வாக்கியம்**

A) மணிமேகலை படித்தாள்; முதன்மையாகத் தேறினாள்; பரிசு பெற்றாள்

B) கண்ணனும் செல்வனும் படித்தனர்

C) “மாணவர்கள் நன்றாகப் படிக்க வேண்டும்” என்று ஆசிரியர் அறிவுரை கூறினார்.

D) கயல்விழி கற்றாள்.

**V. செயப்பாட்டு வினைத் தொடர்.**

A) கோவலன் கொலையுண்டான்.

B) கோவலன் கொலை செய்தான்.

C) கோவலன் கொலை செய்திலன்.

D) கோவலன் கொலை செய்யப்பட்டான்.

**6. <u>வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக [மூன்று மட்டும்]</u>**

**3x1=3**

I

A) தீய பண்புகள் வாழ்வைக் கெடுத்தது

B) தீய பண்பு வாழ்வைக் கெடுத்தன

C) தீய பண்புகள் வாழ்வைக் கெடுத்தன

D) தீய பண்புகள் வாழ்வைக் கெடுக்காது

II.

A) கூட்டத்தில் அறிஞர் பலர் பேசினர்

B) கூட்டத்தில் பல அறிஞர் பேசினர்

C) கூட்டத்தில் பேசினர் பல அறிஞர்

D) கூட்டத்தில் அறிஞர் பலர் பேசின.

III.

A) பொன்னனும் எருதும் வந்தன

B) பொன்னனும் எருதும் வந்தது

C) பொன்னனும் எருதும் வந்தான்

D) பொன்னனும் எருதும் வந்தனர்.

IV.

A) வலது பக்கச் சுவரில் எழுதாதே.

B) வலப்பக்கச் சுவரில் எழுதாதே

C) வலப்பக்கச் சுவற்றுல் எழுதாதே

D) வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.

V.

A) அவள் கொடுத்த நூல் அது அல்ல

B) அவள் கொடுத்த நூல் அஃது அன்று.

C) அவள் கொடுத்த நூல் அது அன்று.

D) அவள் கொடுத்த நூல் அவை அன்று.

## பகுதி -இ (இலக்கியம் -31 மதிப்பெண்)

## Section –C ( Main course book 31 Marks)

7. **<u>பின்வரும் செய்யுள் அடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி</u>:** **(5x1=5)**

**வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ,**
**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென,**
**ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்,**
**ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பி -**

**வினாக்கள்:**

I. மேற்கண்ட அடிகளில் 'மழை' எனப் பொருள் தரும் சொல் எது?

A) வளை B) ஆர்கலி C) வலனேர்பு D) பெயல்

II. நிரை என்ற சொல்லின் பொருள் ____________

A) எருமை B) பசு C) ஆடு D) மூன்றும் சேர்ந்தது

III. இவ்வடிகளை எழுதியவர் யார்?

A) மதுரைக் கணக்காயனார் B) நக்கீரர் C) மாதவன் அய்யப்பன் D) கம்பர்

IV. கோவலர் என்போர் ____________

A) ஆயர் B) உழவர் C) எயினர் D) பரதர்

V. இப்பாடலடிகள் இடம்பெற்ற நூல் எது?

A) கம்பராமாயணம் B) குறுந்தொகை C) நெடுநல்வாடை D).பரிபாடல்

8. **<u>பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி</u>:** **5×1=5**

இலக்கியத்தின் பயன்' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு. அறம், பொருள், இன்பமாகவோ அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ, இந்தப் பயன் இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டும். பின்னால் வந்தவர்கள் இதனை இயந்திரப் போக்காகத் தனியாக ஒட்டாமல் கூறியுள்ளனர். ஆனால் தொல்காப்பியம் மிகவும் தெளிவாக, இலக்கியத்தின் நோக்கம் அல்லது

அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின்போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான், கலை முழுமை (artistic whole) எனப்படுகிறது.

சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளது. அகன் ஐந்திணைகளைப் பேசுகிற தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் 'லட்சியப்' பொருள்களோடு இரண்டற இணைத்துவிடுகின்றது. அதுபோல், இன்னோரிடத்தில், பா வகைகள் ஆசிரியம் முதற்கொண்டு நான்கு எனச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து,

அந்நில மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப (தொல். செய்: 105) என்று பாவகைகளோடு அறவியல் கருத்துக்களை இணைத்துச் சொல்லிவிடுகிறது.

செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் இது. சமூக - பண்பாட்டு மரபிற்கேற்பவே, கலைப்படைப்பை - அழகியல் நெறியை - பண்பாட்டின் இலச்சினையாகச் (symbol of culture) சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது: முன்மொழிந்திருக்கிறது. தமிழ் அழகியலின் நெடும்பரப்பு, இது.

**வினாக்கள்** :

I. .பா வகைகள் மொத்தம் எத்தனை?
II. ‘இலக்கியத்தின் பயன்’ எதுவாக அமைய வேண்டும்?
III. பாடற்பொருள்களாக சங்க இலக்கியம் எவற்றைக் கொண்டுள்ளது?
IV. தமிழ்மரபு எதற்கு தயாராகியிருக்கிறது?
V. இப்பத்தியில் குறிப்பிடப்படும் இலக்கண நூல் எது?

**9. <u>பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடையளி</u>** **[ 2×3=6]**

I. வள்ளலார் இறைவனிடம் வேண்டுவன யாவை?
II. தலைவன் பாங்கனுக்கு கூறியதை எழுதுக.
III. பிறகொடுநாள்கோடை - மாதவனின் கருத்தை விளக்குக.
IV. இராமன் சடாயுவுக்கு இறுதிச்சடங்கு செய்த முறையை எழுதுக ?

**10. <u>பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.</u>** **3×5=15**

I. மணந்தகம்-விளக்குக.

II. அறிவின் நகரம் சென்னை - விளக்குக.

III. பேரிடர் வராமல் இருக்கவும், வந்தால் செய்ய வேண்டுவனவும் யாவை?

IV. தமிழின் தொடரியல் போக்குகளை விளக்குக.

V. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக இன்றும் நிற்பவை எவை?

## பகுதி -ஈ (துணைப்பாடம் -12 மதிப்பெண்)
## Section – D ( Non-detail - 12 Marks)

**11. <u>ஏதேனும் ஒன்று குறித்து துணைப்பாடக் கட்டுரை எழுதுக</u>** **1x7=7**

I. முதல்கல். II. தலைக்குளம் III. உரிமைத்தாகம்

**12. கீழ்காணும் கதைமாந்தரில் ஒருவரின் பண்பு நலனை எழுதுக 1×5=5**

I. மருதன் II. முத்தையன்

## பகுதி -உ( படைப்புத்திறன் -15 மதிப்பெண்)
## Section – E ( Creative writing - 15 Marks)

**13. <u>பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக.</u>** **1×6=6**

I. நடைபெற்று வரும் மட்டைப்பந்து உலகக்கோப்பை போட்டி பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

II. உன் பகுதியில் இயங்கிவரும் அரசு பொது மருத்துவமனைக்கு போதிய மருத்துவர்களை நியமிக்க வேண்டி முதலமைச்சருக்கு விண்ணப்பக் கடிதம் வரைக.

( உனது முகவரி: **பா.இனியவன் /பா.இனியாள், 23, வள்ளலார் நகர், கடலூர். 607001)**

**14.** நல்லாசிரியர் விருது பெற்ற தமிழ்ப் பேராசிரியர் ஒருவரை **நேர்காணல்** செய்க. **1×3=3**

**15. பின்வரும் தலைப்புகளில் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக.** **1x6=6**

I. புவி வெப்பமயமாதல்
II. தாய்மொழிக் கல்வி
III. இந்தியாவின் மக்களாட்சி

---